# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 679/12 — 1991 සැප්තැම්බර් 11 වැනි බදාදා — 1991.09.11

679/12 ஆம் இலக்கம்—1991 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ.—பி 21/78 (11)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 88 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழகச் சேவைகள் மேன்முறையீட்டுச் சபையால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

டபிள்யூ. ஆர். எம். விக்ரமசிங்க,
செயலாளர்,
பல்கலைக்கழகச் சேவைகள் மேன்முறையீட்டுச் சபை.

செப்தெம்பர் 10, 1991.
கொழும்பு.

**கட்டளைச் சட்டம்**

1. இக்கட்டளைச் சட்டம் 1991 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பல்கலைக்கழகச் சேவைகள் மேன்முறையீட்டுச் சபைக் கட்டளைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் கசெற்றில் வெளியிடப்பட்டதன் மேல் இது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (1) (இதனகத்துப் பின்னர் " மேன் முறையீட்டுச் சபை " எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழகச் சேவைகள் மேன்முறையீட்டுச் சபையானது, அது தீர்மானிக்கக் கூடியவாறு அடிக்கடியும் அத்தகைய நேரங்களிலும் இடங்களிலும் கூடுதல் வேண்டும்.

(2) செயலாளர், மேன்முறையீட்டுச் சபையின் எல்லாக் கூட்டங்களையும், மேன்முறையீட்டுச் சபைத் தவிசாளரின் ஒருப்பாட்டுடன், கூட்டுதல் வேண்டும்.

(3) செயலாளர், தம்மால் பேணப்படும் குறிப்புப் புத்தகம் ஒன்றில் மேன்முறையீட்டுச் சபையின் எல்லாக் கூட்டங்களின் குறிப்புகளையும் பதிதல் வேண்டும்.

(4) செயலாளர், முடிவுறாதிருக்கும் விடயங்களின் கோப்புக்களினதும் கையாளப்பட்ட விடயங்களின் கோப்புக்களினதும் கட்டுக்காப்புக்குப் பொறுப்பாளியாதல் வேண்டும்.

3. (1) சட்டத்தின் 86 (அ) என்னும் பிரிவின் கீழ் மேன்முறையீட்டுச் சபையினால் புலனாய்வொன்று செய்யப்படுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், ஒரு மனு என்ற வகையில் அமைதல் வேண்டும். இதில் எந்த ஆட்சேர்ப்புத் திட்டங்கள், அல்லது நியமனங்களுக்கான அல்லது பதவியுயர்வுகளுக்கான நடவடிக்கை முறைகள் மீறப்பட்டுள்ளனவாக விண்ணப்பக்காரரால் சார்த்துரைக்கப்படுகின்றதோ அந்த ஆட்சேர்ப்புத் திட்டங்களினதும் அல்லது நியமனங்களுக்கான அல்லது பதவியுயர்வுகளுக்கான நடவடிக்கை முறைகளினது விபரங்களும் அத்துடன் அத்தகைய மீறுகையின் முறை பற்றிய விவரங்களும் சுருக்கமாக, இலக்கமிடப்பட்ட பந்திகளில் தரப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய மனு ஒவ்வொன்றும் சிங்களத்தில், தமிழில் அல்லது ஆங்கிலத்தில் தட்டெழுத்துச் செய்யப்பட்டு விண்ணப்பகாரரால் ஒப்பமிடப்படுதலும் தேதியிடப்படுதலும் வேண்டும் என்பதுடன் ஆதாரமாகக் கொண்டிருக்கும் ஆவணங்களின் பிரதிகளுடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(3) அத்தகைய மனுவும், அத்தகைய ஆவணங்களின் பிரதிகள் எவையுமிருப்பின், அவையும், எச்சார்த்தப்பட்ட மீறுகைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ, அச்சார்த்தப்பட்ட மீறுகை இடம் பெற்ற மூன்று மாதங்களுக்குள், ஐந்து பிரதிகளில் மேன்முறையீட்டுச் சபையின் செயலாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

4. (1) சட்டத்தின் 86 (ஆ) என்னும் பிரிவின் கீழ் மேன்முறையீட்டுச் சபையால் கவனிக்கப்படுவதற்கென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் ஊழியர்களிடமிருந்து வரும் மேன்முறையீடு ஒவ்வொன்றும், மனுவொன்று என்ற வகையில் அமைதல் வேண்டும். அது பின்வரும் விபரங்களை இலக்கமிடப்பட்ட பந்திகளில் சுருக்கமாகத் தருதல் வேண்டும் :

(அ) எந்த ஆளின் அல்லது எவ்வாட்களின் செயலுக்கு, முடிபுக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது அவ்வாட்கள் ;

(ஆ) எச்செயலுக்கு, முடிபுக்கு அல்லது கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ, அச்செயல், முடிபு அல்லது கட்டளை ;

(இ) மேன்முறையீட்டின் ஏதுக்கள் ; அத்துடன்

(ஈ) கோரப்படும் நிவாரணத்தின் தன்மை.

(2) அத்தகைய மனு ஒவ்வொன்றும் சிங்களத்தில், தமிழில் அல்லது ஆங்கிலத்தில் தட்டெழுத்துச் செய்யப்பட்டு மேன்முறையீடு செய்பவரினால் ஒப்பமிடப்படுதலும் தேதியிடப்படுதலும் வேண்டும் என்பதுடன் ஆதாரமாகக் கொண்டிருக்கும் ஆவணங்களின் பிரதிகளுடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(3) அத்தகைய மனுவும் அத்தகைய ஆவணங்களின் பிரதிகள் எவையுமிருப்பின், அவையும், அத்தகைய செயலின், முடிபின் அல்லது கட்டளையின் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஐந்து பிரதிகளில் செயலாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

5. (1) சட்டத்தின் 86 (இ) என்னும் பிரிவின் கீழ் மேன் முறையீட்டுச் சபையால் கவனிக்கப்படுவதற்கென பழைய பல்கலைக் கழகத்தின் அல்லது ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் ஊழியரகளாக இருந்தவர்களான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊழியர்களிடமிருந்து வரும் மேன்முறையீடு ஒவ்வொன்றும் பின்வரும் விவரங்களை சுருக்கமாக, இலக்கமிடப்பட்ட பந்திகளில் தரும் ஒரு மனு என்ற வகையில் அமைதல் வேண்டும் :—

(அ) பழைய பல்கலைக்கழகத்தின் கீழ் மனுதாரருடைய ஊழியத்தின் காலப்பகுதி ;

(ஆ) சட்டத்தின் 142 ஆம் பிரிவின் கீழ் மனுதாரரால் பணிக்கொடை இளைப்பாற்றுப்படி அல்லது நட்டஈடு எதுவும் பெறப்பட்டிருந்தால், அதன் தொகை ; அத்துடன்

(இ) மனுதாரரால் அவருக்கு வருமதியானதெனக் கோரப்படும் நட்டஈட்டுத் தொகையும் அத்துடன் நட்டஈடு கணக்கிடப்பட்ட முறையும்

(2) அத்தகைய மனு ஒவ்வொன்றும் சிங்களத்தில் அல்லது தமிழில் அல்லது ஆங்கிலத்தில் தட்டெழுத்துச் செய்யப்பட்டு மனுதாரரால் ஒப்பமிடப்படுதலும் தேதியிடப்படுதலும் வேண்டும் என்பதுடன் ஆதாரமாகக் கொண்டிருக்கும் ஆவணங்களின் பிரதிகளுடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(3) அத்தகைய மனுவும் அத்தகைய ஆவணங்களின் பிரதிகள் எவையுமிருப்பின், அவையும், அத்தகைய பணிக்கொடையை, இளைப்பாற்றுப்படியை அல்லது நட்டஈட்டைச் செலுத்துவதற்கு முடிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஐந்து பிரதிகளில் செயலாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

6. ஆயினும், மேன்முறையீட்டுச் சபையானது, அதன் தற்றுணிபின் படி, சொல்லப்பட்ட மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதி முடிவடைந்த பின்னர் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதான, 3 ஆம் பந்தியில் குபீப்பீடு செய்யப்பட்டுள்ள விண்ணப்பமொன்றை அல்லது 4 ஆம் 5 ஆம் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மனுவொன்றை, விடயத்துக்கேற்றவாறு, விண்ணப்பகாரரால் அல்லது மனுதாரரால் காட்டப்பட்ட போதிய காரணத்தின் மேல், எற்றுக் கவனிக்கலாம்.

7. மூன்றாம் பந்தியின் கீழான விண்ணப்பமொன்று அல்லது 4 ஆம் அல்லது 5 ஆம் பந்திகளின் கீழான மனுவொன்றுஇடைக்கப் பெற்றதன் மேல், செயலாளர், விடயத்துக்கேற்றவாறு அத்தகைய விண்ணப்பத்தை அல்லது மனுவை, அது இடைக்கப் பெற்ற தேதியைக்குறிப்பிட்டு பதிவுசெய்தலும் அதற்குத் தொடரிலக்கமொன்றைக் குறித்தொதுக்குதலும் வேண்டும்.

8. மூன்றாம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பம் அல்லது 4 ஆம் அல்லது 5 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மனு எதுவும், மேன்முறையீட்டுச் சபையின் அபிப்பிராயப்படி விழலானது அல்லது அலைக்கழிக்கும் தன்மையினது அல்லது அவதூறான விடயத்தைக் கொண்டிருக்கின்றது அல்லது மேன் முறையீட்டுச் சபையின் நியாயாதிக்கத்துக்கு அப்பாற்பட்டது என இருந்தால், பூர்வாங்க ஆராய்வின் பின்னர் மேன்முறையீட்டுச் சபையால், நிராகரிக்கப்படலாம். மேன்முறையீட்டுச்சபை, அத்தகைய நிராகரிப்பிற்கான காரணங்களைக் குறிப்பிட்டு விடயத்துக்கேற்றவாறு, அல்லது விண்ணப்பகாரருக்கு அல்லது மனுதாரருக்கு பதிவுத்தபாலில் தெரிவித்தல் வேண்டும்.

9. மூன்றாம் பந்தியின் கீழான விண்ணப்பம் ஒன்று அல்லது 4 ஆம் அல்லது 5 ஆம் பந்தியின் கீழான மனுவொன்று தொடர்பிலான எவையேனும் நடவடிக்கைகளில், விடயத்துக்கேற்றவாறு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது ஏதேனும் உயர்கல்வி நிறுவனம் எதிர்வாதிகளாக்கப்படுதல் வேண்டும்.

10. செயலாளர், மேன்முறையீட்டுச் சபையால் வேறு வகையாகப் பணிக்கப்பட்டாலொழிய, மனுவின் பிரதியொன்றை, இணைக்கப்பட்ட எவையேனும் ஆவணங்களின் பிரதிகளுடன் சேர்த்து எதிர்வாதிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

11. எதிர்வாதி, 10 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மனுவும் எவையேனும் ஆவணங்களும் இடைக்கப்பெற்ற தேதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள், அதன் மறுமொழியை நான்கு பிரதிகளில், அது ஆதாரமாகக் கொண்டிருக்க விரும்பும் எவையேனும் ஆவணங்களின் பிரதிகளுடன் சேர்த்து, சபையின் செயலாளருக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

12. எதிர்வாதியின் விண்ணப்பத்தின் பேரில் மேன்முறையீட்டுச் சபையால் அவரின் மறுமொழியையும் ஆவணங்களின் பிரதிகளையும் சமர்ப்பிப்பதற்காக மூன்று வாரகால நீடிப்பு அளிக்கப்படலாம்.

13. எதிர்வாதி, மறுமொழியின் ஒரு பிரதியை, 11 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எவையேனும் ஆவணங்களின் பிரதிகளுடன சேர்த்து, விடயத்துக்கேற்றவாறு, விண்ணப்பகாரருக்கு அல்லது மனுதாரருக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

14. மறுமொழி, சிங்களத்தில், அல்லது தமிழில் அல்லது ஆங்கிலத்தில் தட்டெழுத்து செய்யப்பட்டு, எதிர்வாதியால் ஒப்பமிடப்பட்டு தேதியிடப்படுதலும் வேண்டும்.

15. மேன்முறையீட்டுச் சபையின் தவிசாளர், மறுமொழி இடைக்கப் பெற்றதன் மேல், விடயத்துக்கேற்றாற்போல விண்ணப்பத்தை அல்லது மனுவை விசாரிப்பதற்காக ஒரு திகதியை முடிவு செய்தல் வேண்டும் அத்துடன் அத்தகைய விசாரணை பற்றிய அறிவித்தல் செயலாளரால் திறத்தவர்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

16. விண்ணப்பம் அல்லது மனு விசாரிக்கப்படும் பொழுது ஒவ்வொரு திறத்தவரும், 3 ஆம், 4 ஆம், 5 ஆம், 11 ஆம் பந்திகளின் கீழ் செயலாளருக்கு, பிரதிகள் அனுப்பப்பட்ட எல்லா ஆவணங்களினதும் மூலப்பிரதிகளை மேன்முறையீட்டுச் சபைக்கு இடைக்கச் செய்வித்தல் வேண்டும்.

17. (1) மேன்முறையீட்டுச் சபையின் முன்னரான, ஏதேனும் நடவடிக்கைக்கான ஒவ்வொரு திறத்தவரும், நேரடியாக, அல்லது சட்டத்தரணியொருவர் மூலமாக அல்லது மேன்முறையீட்டுச சபையின் அனுமதியுடன், அரசாங்க சேவையாளர் அல்லது முன்னை நாள் அரசாங்க சேவையாளர் அல்லது நியதிச்சட்டச் சபையொன்றின் ஊழியர் அல்லது முன்னை நாள் ஊழியர் அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றின் அல்லது பல்க்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊழியர் அல்லது முன்னை நாள் ஊழியர், ஒருவராக இருக்கும் பிரதிநிதியொருவர் மூலம் தோன்றலாம்.

(2) திறத்தவர் ஒருவர் சட்டத்தரணியொருவர் மூலம் அல்லது பிரதிநிதியொருவர் மூலம் தோன்றுகின்றவிடத்து, அவர் அத்தகைய நடவடிக்கையின் விசாரணைத் தேதிக்கு குறைந்தது இரு வாரங்களுக்கு முன்னர் மறுதிறத்தவருக்கு அல்லது திறத்தவர்களுக்கு அதுபற்றி அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

18. விண்ணப்பம் அல்லது மனு விசாரிக்கப்படும் பொழுது, ஒவ்வொரு திறத்தவரும் அல்லது, அவரது சட்டத்தரணி, அல்லது அவரது பிரதிநிதி சமர்ப்பணங்கள் செய்வதற்கும் அத்துடன் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால், வாய் மூலமான சாட்சியத்தை முன்வைப்பது சாதாரணமாக அனுமதிக்கப்படுதல் ஆகாது. ஆயினும் மேன்முறையீட்டுச் சபையானது அதன் தற்றுணிபின்படி, அத்தகைய விசாரணையின் போது நீதி நலன் கருதி வாய்மூலமான சாட்சியம் முன்வைக்கப்படுவதை அனுமதிக்கலாம்.

19. (1) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் மேன்முறையீட்டுச் சபையினால் தீர்மானிக்கப்படுவதற்கெனச் சமர்ப்பிக்கப்படும் எல்லா விடயங்களும், மேன்முறையீட்டுச் சபையின் பெரும்பான்மை முடிபொன்றின் மூலம் முடிபு செய்யப்படுதல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டுச் சபையின் இறுதி முடிபானது, திறத்தவர்களுக்குப் பதிவுத் தபால் மூலம் தெரிவிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் முடிபின் பிரதி ஒன்று ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

20. இக்கட்டளைச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், மேன்முறையீட்டுச் சபை அதன் தத்துவங்களைத் தகுந்தவாறு பிரயோகிப்பதற்கும் அதன் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் அவசியமாகக் கூடியவாறான, அத்துடன், எதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதல்லனவான அத்தகைய செயல்களைச் செய்வதற்கும் அத்தகைய பணிப்புரைகளை வழங்குவதற்கும் அதற்குள்ள தத்துவத்தைப் பங்கப்படுத்துதல் ஆகாது.

21. சபையுடனான எல்லாக் கடிதத் தொடர்புகளும் செயலாளருக்கு முகவரியிடப்படல் வேண்டும். அவருடைய தற்போதைய முகவரி பின்வருமாறு :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,
இல. 20, வாட் இடம்,
கொழும்பு 07.

22. இக்கட்டளைச் சட்டத்தில்—

"சட்டம்" என்பது, 1989 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் என்று பொருள்படும் ;

"செயலாளர்" என்பது சட்டத்தின் 84 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மேன்முறையீட்டுச் சபையின் செயலாளர் என்று பொருள்படும்.

09-579

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.